# RTO - PA கைலாசம் பயணமா?



## தேடப்படும் குற்றவாளியோடு அரசு அதிகாரி தொடர்பா?




தமிழக போக்குவரத்து துறையில் தேனி RTO அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு PA–வாக பணிபுரிகிறவர் முரளிதரன்.

இவரது அடாவடியான ஊழல்கள் பற்றியும், மற்றும் விதி மீறிய பணிகள் குறித்தும், இவரது அதிகார துஷ்பிரயோகங்களையும் குறிப்பிட்டு, நம்மால் பல புகார்கள் இந்த முரளிதரன் மீது கொடுக்கப்பட்டும் தற்போதுவரை போக்குவரத்து துறையில் நிலுவையில் இருந்து வருகிறது.

மேலும், முரளிதரன் ஏற்கனவே இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த பெண் ஒருவரை காதலித்து திருமண செய்து விட்டு, இரண்டு பெண் குழந்தைக்கு தந்தையான அவர். தனது அலுவலகத்திலே இவருக்கு அஸிஸ்டென்ட்டாக பணிபுரிந்த, மற்றொரு துறையின் அரசு ஊழியரான ஒரு நேர்மையான அதிகாரியின் மனைவியான திருமதி ராஜராஜேஸ்வரியை, தள்ளிக் கொண்டு வந்து இரண்டாம் திருமணம் செய்து தாரமாக்கி கொண்டார். அது மட்டுமல்லாது இவரது லஞ்ச லாவண்யத்தையும் அவரது 'சொப்பன சுந்தரி யான ராஜராஜேஸ்வரி' யின் லஞ்ச ஊழல்களையும் சேர்த்து வருமானத்திற்கு மீறி சொத்து சேர்த்திருப்பதாக ஒரு வழக்கையும், மதுரை ஊழல் தடுப்பு அதிகாரியான திருமதி T. சூர்யகலா அவர் களால் குற்றப் பதிவும் செய்யப்பட்டு அதுவும் நிலுவையில் உள்ளது.

இப்படி மன்மத ராசவாக வலம் வரும் RTO PA–வான முரளிதரன் போலிசாரால் தேடப்பட்டு வரும் குற்றவாளி யான நித்தியானந்தா–வை தேடி அவரது குழுவில் பயணிக்க, தனது காக்கி சீருடையில் இருந்த புகைப்படத்தோடு முகநூலில் பதிவேற்றி உள்ளார்.








மு.க.ஸ்டாலின்

இறையன்பு ஐ.ஏ.எஸ்.



பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்.





நிர்மல்ராஜ் ஐ.ஏ.எஸ்.



கந்தசாமி ஐ.பி.எஸ்.

இது போக்குவரத்துத் துறையின் நிர்வாகத் திற்கு களங்கம் ஏற்படுத்தும் செயல் அல்லவா ? இதனை எப்படி நிர்வாகம் கண்டு கொள்ளாமல் உள்ளது என அதிரடியான, இவரது சக அதிகாரிகளே கேள்வியை எழுப்பி வரு கின்றனர். (பார்க்க முகநூல் )

அரசு அதிகாரியான இவர், அரசுக்கு எதிரான வாசகங்களை தனது வாட்ஸ் ஆஃப்–லிலும், முகநூல்களிலும், அரசை விமர்சிப்பதும், மற்றும் காவல்துறையினரால் அறிவிப்பு வெளி யிடப்பட்டு தேடப்பட்டு வரும் குற்றவாளியான நித்தியோடு, முகநூல் மூலமாக Nithy Where are you I want to join with you என பதிவிட்டு வருவதுபோக்குவரத்து துறை அதிகாரிகள் வட்டாரத்தில் ஒரு புகைச்சலை ஏற்படுத்தி வருகிறது.

முரளிதரன் F.I.R.



FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051844

1. District: Madurai PS: V & AC Year: 2021 FIR No: 14/2021 Date: 11.10.2021
2. (i) Act: PC Act 1988 Sections: 13(2) r/w 13(1)(e) of PC Act 1988
3. (a) Occurrence of Offence Day: Date from 01.10.2012 Date to 31.10.2017
(b) Information Received at PS. Date: 07.05.2021
(c) General Diary Reference: Entry No(s): 11.10.2021 Time 10.00 hrs
4. Type of Information: Written/ Oral: Receipt of Credible information
5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
(b) Address:
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: District:
6. Complainant /Informant (a) Name: T. Sumyakala (b) Father's/ Husband's Name: T. Thangavelusamy
(c) Date / Year of Birth: 01/12/1975 (d) Nationality:
(e) Passport No.:
Date of Issue: Place of Issue:
(f) Occupation: Inspector of Police (g) Address: Vigilance & Anti-Corruption, Madurai.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
1) Tr. S. Muralidharan 55/2021 Formerly PA to State Transport Authority Chennai 2) Tmt. S. Rajeswari 44/2021 Formerly Assistant Office of the RTO (West) Chennai
8. Reasons for delay in reporting by the complainant / Informant
On Receipt of Credible information after making a discreet enquiry these after, this case is ...

இரண்டு திருமணம் செய்துகொண்டதற்கே பணியிடை நீக்கம் செய்யவேண்டிய முரளிதரன் மற்றும் விருகம்பாக்கம் RTO –ல் சூப்பிரண்டாக பணிபுரியும் அவரது இரண்டாம் தாரமான மாற்றான் மனைவியான ராஜராஜேஸ்வரி மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் எழிலக நிர்வாகம் கைகட்டி வேடிக்கை பார்த்து வருவதால்தான் அவரது ஒப்பனைக்கு ஏற்ப நித்தியை தேடுகிறாரோ ? என கேள்விகளும் எழுகிறது.

எங்கள் கோவில்பட்டியில் ஒரு சொலவடை சொல்வார்கள் அதாவது ‘‘கோவணத்தில் காசிருந்தா கோழிக்குக்கூட பாட்டு வரும்’’ என்பார்கள், அதுபோல இவரது ஊழல் பணத்தின் திமிருகள் ‘ஜல்சா’ பண்ண கைலாசம் தேடுகிறது.

அதிரடியான, ஆணையர் நிர்மல்ராஜ் IAS அவர்கள்தான் இவர்களது குற்ற கோப்புகள் அனைத்தையும் தூசி தட்டி பணியிடை நீக்கம் செய்ய பணிந்து கோருகிறோம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

05–08–2022